# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 32/2020

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாபு | மதம் | : இந்து |
| த/பெ | : கிருஷ்ணா ரெட்டி | ஜாதி | : – |
| வயது | : 48 | கிராமம் | : புஜ்ஜிரெட்டிபள்ளி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

27.11.2024

<u>வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

2. வழக்கு சொத்தை நானோ எனக்கு முன் இருந்தவர்களோ அனுபவித்து வந்தோம் என்பதை காட்ட அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை என் அப்பா அனுபவித்து வந்தார் என்பதை காட்ட அடங்கல் எதுவும் என் அப்பா பெயரில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 1964 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் என் அப்பா பாகத்திற்கு வழக்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வழக்கு பிராதில் குறிப்பிட்டுள்ள நான்கு எல்லைகளை குறிப்பிட்டு புல எண்.115/2B விஸ்தீரணம் 5 ஏக்கர் 55 செண்ட் என வா.சா.ஆ 1 பாக ஆவணத்தில் என் அப்பாவிற்கு சொத்து ஒதுக்கப்படவில்லை என்றாலும் புல எண்.115.34.49 ல் தெற்கு 0.11.0 நிலத்தில் 0.5.50 நிலம் என்று உள்ளது. 23.08.2017 தேதியிட்ட பாக ஆவணம் வா.சா.ஆ 2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ 2 ல் எனக்கு பி அட்டவணையாக வழக்கு சொத்து ஒதுக்கப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த ஆவணத்தின் அடிப்படையில் வா.சா.ஆ 2 ஆவணத்தில் நான்கு எல்லைகள் சொல்லியுள்ளேன் என்றால் 1964 ஆவணத்தில் கிழக்கு பாகம் என்று உள்ளதை வைத்து சொல்லியுள்ளோம். அவ்வாறு 1964 ம் ஆவணத்தில் சொல்லவில்லை என்றாலும் நான்

வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. திருவள்ளூர் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.77/2021 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதில் நான் 6ம் பிரதிவாதி என்றாலும் சரிதான். அ.வ.எண்.77/2021 வழக்கு சந்திரசேகர் ரெட்டி, பக்தவட்சல ரெட்டி ஆகியோர் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். அ.வ.எண்.77/2021 வழக்கின் பிராது நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் பிராது நகல் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அ.வ.எண்.77/2021 உரிமை விளம்புகை கேட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். புஷ்பா, ஜோஷ்னா, டில்லிராணி, வம்சி கிருஷ்ணா, சர்வியா, நாகம்மாள் மற்றும் என்மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான்.

6. என் பெயரில் பட்டா எண்.4760ல் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பட்டா தவறுதலாக கொடுக்கப்பட்டது என்பதால் ரத்து செய்ய வேண்டும் என RDO விடம் மனு கொடுத்து பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் கிராம நிர்வாக அலுவலர் எனக்கு கைபேசியில் தற்செயலாக அழைத்ததன் பேரில் நான் ஆவணங்களுடன் RDO விடம் சென்றேன். RDO எனது ஆவணங்களை பார்க்காமல் பட்டாவை ரத்து செய்துவிட்டார். நான் இந்த விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை.

7. வருவாய் கோட்டாட்சியர் என்னை விசாரணை செய்யாமல் பட்டா ரத்து செய்துவிட்டதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கு முன்பே 2019 லேயே ந.க.எண்.178/2019/அ 2 நாள் 01.07.2019 ன்படி பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் நான் சென்ற மறு நாளே பட்டா ரத்துசெய்யப்பட்டுவிட்டதாக வீட்டிற்கே கடிதம் வந்துவிட்டது. எந்த விசாரணையும் செய்யாமல் பட்டாவை ரத்து செய்துவிட்டனர். வருவாய் கோட்டாட்சியர் விசாரணையில் என் பெயரில் உள்ள பட்டா தவறானது என்றும் நான் சொத்திற்கான சரியான ஆவணங்களை காண்பிக்கவில்லை என்றும் கூறி பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் நான் ஆவணங்களை எடுத்து சென்றேன். அதற்கு எந்த பதிலும் இல்லை.

8. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவின் பேரில் நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்தேன். நான் அந்த மனு நகல் எதையும்

இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மையிலேயே மேல்முறையீடு செய்திருந்தால் அந்த மனுவை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் நான் மேல்முறையீடே செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை அபகரிக்க பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் வழக்கு சொத்தை அனுபவித்ததை காட்ட வழக்கிற்கு முன்போ வழக்கு தாக்கல் செய்த காலத்திலோ உள்ள அடங்கலோ வருவாய் ஆவணங்களோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

9. வழக்கு சொத்தின் புல எண்.115/2A ல் முழு விஸ்தீரணம் 3.5.50 பட்டா எண்.4813 சீனிவாச ரெட்டி, கிருஷ்ணா ரெட்டி பெயரில் கூட்டு பட்டாவாக இருந்தது என்றால் புல எண்.115/2 ஐ பொருத்து வட்டாட்சியர் அறிக்கை கொடுத்துள்ளார் ஆனால் வருவாய் கோட்டாட்சியர் புல எண்.115/2A ஐ பொருத்து உத்தரவு பிறப்பித்துள்ளார். என்னிடம் மேற்படி உத்தரவு கைவசம் உள்ளது என்றால் சரிதான். நான் அந்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் சொல்வது உண்மையாக இருந்திருந்தால் நான் அந்த உத்தரவை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. கூட்டு பட்டா எண்.4813 என் அப்பா கிருஷ்ணா ரெட்டி மற்றும் பிரதிவாதிகளின் அப்பா சீனிவாச ரெட்டி பெயரில் உள்ளது என்றால் தற்போதும் கூட்டு பட்டாவாக தான் உள்ளது.

10. கூட்டு பட்டாவை பொருத்து கிருஷ்ணா ரெட்டி, சீனிவாச ரெட்டி சொத்தை பிரித்துக்கொண்டார்களா என்றால் 1964 லேயே என் அப்பாவிற்கு 5 ஏக்கர் 55 செண்ட் பிரித்து கொடுத்துவிட்டார்கள். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 ஆவணத்தில் என் அப்பாவிற்கு 5 ஏக்கர் 55 செண்ட் ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உரிமை பிரச்சனை இருப்பதால் நான் தாக்கல் செய்துள்ள உறுத்துக்கட்டளை மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. கூட்டு பட்டாவில் உள்ள சீனிவாச ரெட்டி, கிருஷ்ணா ரெட்டி ஆகியோரின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் சந்திரசேகர் ரெட்டி,பக்தவட்சல ரெட்டி, சரத்பாபு, ஹரி, பாபு ஆகியோர் மீது மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்எ ன்றால் சரிதான்.

11. புஷ்பா, ஜோஷ்னா, டில்லிராணி, வம்சி கிருஷ்ணா, சர்வியா, நாகம்மாள் ஆகியோரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர்கள் தனியாக பிரித்து

கொண்டார்கள். நாங்கள் தனி. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கூட்டு பட்டாவில் உள்ள நபர்களை இவ்வழக்கில் நான் சேர்த்திருக்க வேண்டும் என்றாலும் அவர்களை சேர்க்காததால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)